RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt2224s2128

OPEN ACCESS

# உதயணகுமார காவியம் உணர்த்தும் சமண துறவு முறை

இரா. செல்லமுத்து [அ, *]

[அ] தமிழ்த்துறை, அரசு கலைக் கல்லூரி (தன்னாட்சி), கரூர்-639007, தமிழ்நாடு, இந்தியா.

# Asceticism of Jainism as Depicted in Udayanakumara Kaviyam

R. Chellamuthu [a, *]

[a] Department of Tamil, Government Arts College, (Autonomous), Karur-639007, Tamil Nadu, India

* Corresponding Author: chellamuthukarur@gmail.com

Received: 30-08-2022
Revised: 30-09-2022
Accepted: 07-10-2022
Published: 15-11-2022

Check for updates

**ABSTRACT**

Jainism, considered to have been created by Rishabadeva has produced numerous literatures in both Tamil and Sanskrit languages. Most of the literature in Tamil language is about Jainism. In particular, Ainchiru Kappiyam explores in detail about the doctrines of Jainism. In Udayanakumara Kaviyam the domestic and ascetic principles of Jainism are explained clearly. Udayanakumara Kaviyam, which is considered to be a summary of Konguvael Makatha, consists of Unjai Kandam, Ilavana Kandam, Magada Kandam and Vathava kandam, Naravagana Kandam and thuravu Kandam and about the 367 hymns. This article clearly explains about the principles of asceticism of Jainism.

**Keywords:** Jainism, Udayanakumara Kaviyam, Principles, Literatures

## முன்னுரை

கொங்குவேல் மாக்கதையின் சுருக்கமாக கருதப்படும் உதயணகுமார காப்பியம் உஞ்சை காண்டம், இலாவாண காண்டம், மகத காண்டம், வத்தவ காண்டம், நரவாகன காண்டம், துறவு காண்டம் என ஆறு காண்டங்களையும், 367 பாடல்களையும் கொண்டது. இதன் ஆசிரியர் பெயர் அறியப்படவில்லை. இக்காப்பியத்தின் துறவு காண்டம் உணர்த்தும் சமண சமயத்தின் துறவு கோட்பாடுகளை இக்கட்டுரையில் காண்போம்.

## சமணம்

ஆதி காலச் சமயமாகிய சமணத்தின் முக்கிய குறிக்கோள் ஆன்மாவைச் சுத்தம் செய்வது. இந்த சமயத்தில் காணப்பெறும் இந்திரன், திருமகள், பிரம்மா உள்ளிட்ட பெயர்கள் இச்சமயத்திலும் காணப்படுகிறது. பொதுவாகப் பதினாறு விதமாக தேவ உலகங்கள் இருப்பதாகவும், கல்பூர்ண கல்பம், பரமகல்பம், உள்ளிட்ட 16 வகையான கல்பங்கள் உள்ளதாகவும் சமணம் கூறுகிறது. ஒரு ஆன்மா ஒவ்வொரு பிறவி எடுத்து இறுதியில் ஒவ்வொரு உலகத்திலும் ஆன்மாவிலுள்ள வினைகள் நீக்கப்பட்டுப் பதினாறாவது உலகத்தை அடையும் போது அந்த ஆன்மா தீர்த்தங்கரர் நாமநல் வினை என்னும் ஏனம் பெறுகிறது. அவ்வாறு பெற்றதும் மீண்டும் உலகில் பிறப்பெடுக்கிறது.

இப்பிறப்பிற்கு ஆறுமாதத்திற்கு முன்பே, சௌதர்ம கல்பத்தில் உள்ள இந்திரன் அந்த ஆன்மா பிறக்கும் ஊர், இடம், ஆகியவற்றைத் தெரிந்து தேவர்களுக்கு ஆணையிடுவான். இந்திரனின் கட்டளையை அடுத்து தேவர்கள் அவ்வூரில் இந்திரன் மழை பொழிவர். இவ்வாறு நிகழும் நிகழ்வுக்கு கர்பவதார கல்யாணம் என்று பெயர். இதை அடுத்து தீர்த்தங்கரர் ஆன்மா அவதரிக்க எந்தப் பெண்ணை

ஏற்கிறதோ அவருக்கு ஜின மாதா என்று பெயர். அவர் இரவில் 16 விதமான கனவுகளைக் காண்பார். அவை,

1. யானை. 2. எருது. 3. சிங்கம் 4. யானைகளால் நீராடப்படும் திருமகள். 5. பூ மாலைகள் முழுமதி சந்தி, 6. உதய சூரியன். 7. தண்ணீரில் நீந்தக் கூடிய மீன். 8.இரண்டு பூர்ண கும்பங்கள் 9. தாமரைப் பொய்கை. 10. கடல் 11. அறியாசனம். 12. தேவர்கள் செல்லும் விமானம். 13. புவன விமானம். 14. நவரத்தின குவியல். 15. புகையில்லாத நெருப்பு. 16. முழுமதி

இவ்வாறு 16 வகையான கனவு கண்ட பின் ஜீன மாதா ஒரு நல்ல நாளில் தீர்த்தங்கரக் குழந்தையைப் பெற்றெடுப்பார். தீரத்தங்கர ஞானம் பெற்று அவதரிக்கும் அக்குழந்தையை இந்திரன் எடுத்துச் சென்று சுமேரு மலையில் தேவர்களுடன் இணைந்து பார்க்கடலில் இருந்து தண்ணீரை கொணர்ந்து நீராட்டி ஆடை ஆபரணங்கள் அளித்து மீண்டும் ஜின மாதாவிடம் ஒப்படைத்து அவருக்குப் பெயர் வைப்பார். இதற்கு ஜென்ம கல்யாணம் என்று பெயர். இவ்வாறு வளரும் இக் குழந்தை ஒரு குறிப்பிட்ட காலத்துக்குப் பிறகு ஒரு சில நிகழ்வுகளைக் கண்டு உலக வாழ்வை வெறுத்துத் துறவு நிலையை அடைய என்னும் போது இந்திரன் மீண்டும் ஒரு சிவிகை கொணர்ந்து அவருக்கு அளிப்பான். அதில் ஏறி காட்டுக்குச் சென்று அனைத்தையும் துறந்து துறவு நிலையை அடைவது தீட்ஷா கல்யாணம் என்று அழைக்கப்படுகிறது. இதன் பிறகு கடும் துறவு மேற்கொள்வர். அதன் பயனாக நான்கு விதமான காதி கர்மங்கள் ஒரு நாள் அந்த ஆன்மாவை விட்டு விலகும் அதன் பின் இந்திரன் மீண்டும் வந்து வானத்தில் ஒரு மண்டபம் அமைத்துக் கொடுப்பான். அதன் பெயர் சமவசரணம் என்று அழைக்கப்படுகிறது. அம்மண்டபத்தில் அமர்ந்து இவ்வுலகிற்குத் தீர்த்தங்கரர் அறிவுரை பகர்வார். இது கேவல ஞான கல்யாணம் என்று அழைக்கப்படுகிறது. பொதுவாகத் தன் வாயைத் திறந்து பேசுவதில்லை. ஒரு தெய்வீகக் குரல்தான் அவர்களது கொள்கைகளை அனைத்து மொழிகளிலும் தெரிவிக்கும். இக்குரல் ஒரு நாளைக்கு மூன்று முறை மட்டுமே ஒலிக்கும். இதற்குத் திவ்யதுணி என்று பெயர்.

இதன் பிறகு தனக்குப் பிடித்தமான மலைக்குச் சென்று கடும் தவம் மேற்கொள்வர். அதன் பயனாக வினை அவர்களை விட்டு நீங்கும். இவ்வாறு புனிதமடைந்த ஆன்மா இவ்வுலகில் இருந்து விடைபெற்று பதினாறு தேவ உலகங்களை அடுத்து உள்ள மூன்று அடுக்குகளுக்கும் மேல் சித்தர்கள் வாழும் சித்த உலகை சென்று அடையும். இதற்கு பரிநிர்வான கல்யாணம் என்று பெயர். இவ்வாறு ஒவ்வொரு ஆன்மாவும் புனிதமடைந்து சித்த உலகத்தை அடைய வேண்டும் என்பதே சமண சமயத்தில் அடிப்படை நோக்கமாகும்.

## தீர்த்தங்கரர் பொருள் விளக்கம்

24 தீர்த்தங்கரர்களையும் இச்சமயத்தவர் அருகர் என்ற பொதுப்பெயரால் அழைப்பர். தீர்த்தங்கரர் எனும் சொல்லுக்கு பிறவிக் கடலில் இருந்து தன் ஆன்மாவை நீக்கிக் கொண்டவர் என்று பொருள் கூறலாம். மேலும் மயிலை. சீனிவேங்கடசாமி அவர்கள் பின்வருமாறு விளக்கம் கூறுகிறார்.

"புலன்களையும் கர்மங்களையும் வென்றவர் ஆகலின் தீர்த்தங்கரக்கு ஜீனர் என்னும் பெயர் உண்டு, ஜினரை கடவுளாக உடையமதம் ஜைன மதம் எனப்பட்டது." சுஜாதா அவர்கள் இதற்கு மற்றொரு விளக்கத்தை தருகிறார் (Mailai Seeni Venkatasamy, 2008).

"வழிகாட்டிகள், பாளங்கள் என்று

செல்லலாம்"

உஜைன ராமயணம் இதனை.

"பிறவிக்கடலை நீந்த அறமாகிய தெப்பத்தை அளிப்பவர் என்ற பொருளில் அவர் தீர்த்தங்கரர் என்று போற்றப்படுவர்" (Sri Chandran, 2009).

## தீர்தங்கரர்களின் வாகனங்களும் சின்னங்களும்

1. ரிஷபநாதர் - இவர் முதலாவது தீர்த்தங்கரர் ஆவார். இவருக்கு ஆதிநாதர் என்னும் மறுபெயர் உண்டு. இவரது வாகனம் காளை
2. 2 அஜிதநாதர் - யானை
3. சம்பவநாதர் - குதிரை
4. அபிநந்தனர் - குரங்கு
5. சுமதிநாதர் - கோட்பான்
6. பத்மபிரபர் - தாமரை
7. சுபர்சுவநாதர் - சுவசுத்திக்கா
8. சந்திரபிரபர் - வளர்பிறை சந்திரன்
9. புஷ்பதந்தர் - கரங்கு
10. சீதளநாதர் - கற்பகமரம்
11. சிரேயான்சுவநாதர் - காண்டாமிருகம்
12. வார்சு பூஜ்ஜியர் - எருமை
13. விமலநாதர் -பன்றி
14. அனந்தநாதர் -முள்ளம் பன்றி
15. தருமநாதர் - வஜ்ஜிராயுதம்
16. சாந்திநாதர் - மான்
17. குந்துநாதர் - ஆடு
18. அரநாதர் - மீன்
19. மல்லிநாதர் - கலசம்
20. முனிஸ்வரநாதர் - ஆமை
21. நமிநாதர் - நீலத்தாமரை
22. நேமிநாதர் - சங்கு
23. பார்ச்சுவநாதர் - பாம்பு
24. மகாவீரர் - சிங்கம்.

இவர்கள் தவிர வருங்காலத்தில் தோன்றவிருக்கும் தீர்த்தங்கரர்களின் திருநாமங்களையும் ஸ்ரீபுராணம் அறியத்தருகிறது (Sri Chandran, 2009).

1.சிரேணிகன். 2.சுபார்வர். 3.அபங்கர் 4. புரோஷ்டிலர். 5.கய்பரு. 6.கூத்திரியர். 7.சிரேஷ்டி 8. சங்கர். 9. நந்தனார். 10.சுநந்தவாக். 11.சகாங்கர். 12.ஸேவகர்.13. பிரமேர். 14.ரோனர். 15.ரைதவர். 16.வாசுதேவர். 17.பலதேவர். 18.பகலி 19. வாகலி.20. துவைபாயதர். 21.கநகபாதர். 22.தாரதர். 23.சாநபாதர். 24.ஸாத்யகி.

## துறவு பூணும் முறை

சமண சமயத்தில் அனைவரும் தனது கர்மவினைகளை ஒழிக்க துறவு பூண்டு உயிர் துறக்கவேண்டும் என்பது தலையாய கடமையாகும். சமணம் இல்லறத்தைவிட துறவறத்தையே வலியுறுத்துகிறது. பொதுவாக துறவு சமண சமயத்தில் மிக கடுமையானதாகும். துறவு வாழ்க்கையை ஏற்பவர்கள் செய்ய வேண்டிய கடமைகளை உதயணன் வழி பின்வரும் பாடல்கள் மூலம் அறியலாம்.

“காலம்இது காட்சிதலை கண்டுணர்த்தக் கைக்கொண்டு

ஞாலநிகழ் ஞானமு நன்குமிகவே உணர்த்திச்

சீலமாதி யாயொழுக்கம் சீருடன் அளித்தபின்

கோலமான குஞ்சிமுதல் வாங்கித்தவம் கொண்டனர்.”

இப்பாடல் மூலம் துறவு மேற்கொள்ளும் சமணர் தங்களது தலை முடிகளை தம் கைகளால் பிடிங்கி எறிய வேண்டும். அவ்வாறு செய்வதல் மூலமே அவர்கள் துறவுக்கு தகுதியானர்கள் என

ஏற்றுக் கொள்ளப்பட்டது. சவரம் செய்து முடிகளை நீக்குவதன் மூலம் முடிகளுக்குள் உள்ள உயிரினங்களுக்கு துன்பம் நேரிடும். ஆனால் தன் கைகளால் அகற்றுவதன் மூலம் அவைகளுக்கு ஏற்படும் துன்பத்தை குறைக்க நேரிடும் என்பது சமண சமயத்தின் அழிக்க முடியாத கருத்து ஆகும். துறவு மேற்கொண்டவர்கள் ஏற்க வேண்டிய கடமைகளாக பின்வரும் பாடல் உணர்த்துகிறது.

"அறுவகைய காயங்களை அருள்மிக்குற்று ஓம்பியும்

பொறிகளை மனத்தடக்கிப் புண்ணியமா நோன்புகள்

அறிகுறி யநசனம் ஆற்றுதற்கு அரிதுஎன

மறுவறு தியானமும் மதியகம் தெளிந்தவே"

துறவு வாழ்க்கை பூண்டவர்கள் ஆறு வகையான சவநிகாயங்களை அருட் பண்பு மிக்கும் பாதுகாத்தல் வேண்டும். மேலும் ஆர்த்த ரௌத்திர தியானங்களை விளக்கி தர்ம சுகிலத் தியானத்தையும் ஏற்க வேண்டும் என்பதைக் கீழ்வரும் பாடல் விளக்குகிறது (Muthappan, 2005).

"புறத்தினும் அகத்தினும் போகத்தொடர்ப் பாடுவிட்டு

அறத்திடை அருளினால் ஆருயிரை ஓம்பியும்

திறத்துடன் சமிதியும் சிந்தையின் அடக்கமும்

திறத்திறத்து உணர்ந்துபின் தியானம் முற்றினார்களே"

அகம்புறம் ஆகிய இரண்டிலும் ஏற்படும் போலியான இன்ப நுகர்ச்சிகளையும் அறவே அறுத்து எறிதல் வேண்டும். ஐவகை சமிதிகளையும், மூவகை குப்திகளையும் மனதில் நிலை நிறுத்தி தியானம் மேற்கொள்ளுதல் வேண்டும் என வலியுறுத்துகிறது (Muthappan, 2005). ஐவகை சமிதிகள் ஆவன

1. ஈர்யாசமிதி சிற்றுயிர்க்கும் துன்பம் நேராமல் பார்த்து நடத்தல்
2. பாஷாசமிதி - பேசும் வார்த்தைகளில் கவனமாக இருத்தல்
3. ஏஷணாசமிதி - உணவில் கவனமாக இருத்தல்
4. ஆதானநிட்சேபணாசமிதி - பயன்படுத்தும் பொருள்களில் கவனமாக இருத்தல்
5. உத்சர்க்கசமிதி - மலம், சிறு நீர் கழிப்பதில் கவனமாக இருத்தல்.

## மூவகைகுப்தியாவன

மனம், மொழி, செயல் ஆகியவற்றில் அடக்கம் உடைமை இவைகளை சமண துறவிகள் கடுமையாக கடைபிடித்தல் வேண்டும். மேலும் இவர்கள் நான்கு வகை யோகங்களையும் முழுமையாக உணர்ந்து கொள்ளுதல் வேண்டும். அவையாவன,

1. பிரதமானுயோகம்- இவ்வகையோகமாவது 24 தீர்த்தங்கரர்கள் வாசுதேவர் பிரத், வாசுதேவர் ஆகியோரது வரலாற்றை அறிந்து கூறுவது ஆகும்.
2. சரணானுயோகம் - இவ்வகை யோகமாவது இல்லற ஒழுக்கங்களையும் துறவற ஒழுக்கத்தையும் அடங்கிய செய்திகளை எடுத்துரைப்பது ஆகும்.
3. கரணானுயோகம்- இவ்வகை யோகமாவது மூவுலக அமைப்பு விவரங்களையும் வினைகளையும் விளக்கி கூறுதல் கரணானுயோகம்.
4. திரவ்வியானுயோகம்- உயிர் முதலான ஆறு பொருள்களையும் ஏழு வகையான தத்துவங்களையும் ஒன்பது பதார்த்தங்களையும் மற்றும் விளக்கி கூறுவதாகும்.

மேலும் சமண துறவிகள் ஆற்ற வேண்டிய கடமைகளை பின்வரும் பாடல் மூலம் உணர்த்துகிறது

"ஒருவகை எழில்மனம் இருவகைத் துறவுடன்

மருவுகுத்தி மூன்றுமே மாற்றிநான்கு சன்னையும்

பொருவில் ஐம்புலமடக்கிப் பொருந்தியவாவச்சமூ

விருவகைச் செவிலியும் எழுவரையும் வைத்தனர்."

ஒரே நிலையில் மாறாமல் நிலைத்த மனம் அகத்தவம் புறத்தவம் ஆகிய இருவகையானதுறவு, மனம், மொழி, செயல் ஆகிய மூவகையான அடக்கம் ஆகியவற்றை ஏற்று, பசி, காமம், அச்சம், அவா ஆகிய நான்கையும் விலக்கி ஐம்புலங்களையும் அடக்கி ஆறு வகையான துறவியர் கடமைகளையும் சிறப்பாக பெற்று ஏழு வகையான குணங்களையும் எய்தி அவர்கள் தவத்தை எய்த வேண்டும். அதுமட்டுமின்றி (Muthappan, 2005).,

"சுத்திமிக எட்டினோடும் சூழ்ந்தயோகு ஒன்பதாம்

பத்துவகை ஊற்றடைத்துப் பயின்றாங்கம் பத்தொன்றும்

சித்தம்பனி ரெண்டுசீர்க் கிரியைபதின் மூன்றுடன்

ஒத்தபங்கம் ஈரேழும் ஒருங்குடன் பயின்றனர்"

தமது தலை முடியைத் தாமே களைதல், ஆடையின்றி இருந்தல், தரையிலேயே படுத்தல், நின்று கொண்டே உணவு ஏற்றல், ஒருவேளை மட்டும் உணவு ஏற்றல் முதலான மனவலிமை மிக்க எட்டு குணங்களை ஏற்று ஒன்பது வகையான யோக நிலைகளை அவர்கள் மேற்கொண்டு உத்தம பொறை முதலான பத்து வகையான தருமக் குணங்களால் வினைவரும் ஊற்றை அடைத்து பசி, நீர், வேட்கை ஆடையின்மையால் ஏற்படும் துன்பம். குளிர், வெப்பம் முதலானவற்றைப் பொறுத்து வெல்லுதலாகிய பதினோரு வகை அடக்கங்களை ஏற்கவேண்டும். நிலையாமை சிந்தனை, அறன் இன்மை சிந்தனை முதலான பன்னிரண்டு சிந்தனைகளை மனங்கொண்டு பதின்மூன்று வகையான சிறப்புமிக்க கிரியைகளை மேற்கொண்டு பதினான்கு வகையான பூர்வ ஆகமங்களையும் பயிலுதல் வேண்டும் இவைகள் துறவிகள் ஆற்ற வேண்டிய கடமைகள் ஆகும். சமணத்தில் முதல் முதலாக துறவு ஏற்பவர் சர்வ சாதுக்கள் எனப்பட்டனர். பின்னர் அவர்களின் துறவு நிலைக்கேற்ப உவாத்தியர், ஆச்சார்யர், சித்தர், அருகர் என உயர்ந்த பதவிகளை பெறமுடியும் (Muthappan, 2005).

## முடிவுரை

மனித உடலை வருத்திக் கொள்வதல் மூலம் சிற்றின்பங்கள் இருந்து விடுபட்டு பேரின்ப எல்லையை அடைய முடியும் எங்கிறது சமணம். பல கடுமையான விரதங்கள் ஆண்மாவை கர்ம வினைகளை போக்கி அவற்றை புனிதமாக்குகிறது என்பது இச்சமயதின் முக்கிய கோட்பாடு ஆகும். ஒரு காலத்தில் புகழின் உச்சத்தில் இருந்த இச்சமயம் கடைபிடிக்க முடியாத பல கடுமையான விரதங்கள் காரணமாக மக்களின் நம்பிக்கைகளை பெறாமல் வடக்கொழிந்து போயின என்பது உண்மை. இவ்வாறு சமணா துறவு குறித்து உதயணகுமாரகாப்பியம் உணர்த்துகிறது.

## References

Mailai Seeni Venkatasamy, (2018) Samanamum Tamilum, Naam Thamizhar Pathippagam, Chennai, India.

Muthappan, P. (2005) Uthayanakumara Kaviyam, New Century Book House, Chennai, India.

Sri Chandran, J. (2009) Puranam, Vardhamanan Pathippagam, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

## About the License:

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License